செ.வெ.எண் : 06/ மே நாள் : 06.05.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில்**

**அரசு முதன்மை செயலாளர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் ஆய்வு.**

இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்று (06.05.2021) அரசு முதன்மை செயலாளர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர், கொரோனா சிகிச்சைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள படுக்கைகள், மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படும் திரவ ஆக்சிஜன் இருப்பு குறித்து நேரில் ஆய்வு செய்தார்கள்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 1287 நபர்களுக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 73,236 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. நோய்த்தொற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள் இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 600-ம், பரமக்குடி அரசு மருத்துவமனையில் 200-ம், முதுகுளத்தூர், கமுதி, கீழக்கரை உள்ளிட்ட மருத்துவமனைகளில் 200-ம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 500-ம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. என மொத்தம் 1,500 படுக்கைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது இராமநாதபுரம் அரசு மருத்துவ மருத்துவக் கல்லூரியில் 1000 படுக்கை வசதிகளாக மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் 800 ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கை வசதிகளுடன் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் அரசு மருத்துவ மருத்துவக் கல்லூரியில் 11 ஆயிரம் கொள்ளளவு கொண்ட திரவ ஆக்சிஜன் சேமிப்பு அமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. நாளோன்றுக்கு சராசரியாக 1800 லி முதல் 2200 லி அளவு திரவ ஆக்சிஜன் பயன்படுத்தப்படுகிறது. மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுவோருக்கு சிகிச்சைக்காக போதிய அளவு ஆக்கிஜன், படுக்கைகள், உயிர் காக்கும் மருந்துகள் தயார் நிலையில் உள்ளன.

பொதுமக்கள் பங்களிப்பு மூலம் மட்டுமே கொரோனா நோய்த்தொற்றை தடுக்க முடியும். பொது இடங்களுக்கு செல்லும் போது அனைவரும் கட்டாயம் முக கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல், கைகளை அடிக்கடி சுத்தம் செய்தல் போன்ற நடைமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, கேணிக்கரையில் உள்ள தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மருந்து சேமிப்பு கிடங்கிற்கு அரசு முதன்மை செயலாளர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரடியாகச் சென்று இருப்பு வைக்கப்பட்டுள்ள மருந்து பொருட்கள் குறித்து நேரில் ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப்குமார்,இ.ஆ.ப., இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.எம்.அல்லி, இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., மருத்துவர்கள் மரு.மலையரசு, மரு.ஜவஹர் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**